<u>**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**</u>

அ.வ.எண். 218/2020, வா.சா. 2. மணிகண்டன்

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13 ம் தேதியில் வாதி தரப்பு சாட்சியாகிய, வா.சா.2 ஆன மணிகண்டன் என்பவரின் வாக்குமூலம் (1969 ஆண்டு 44 வது விதியின்படி) திருமதி. R. சுஜாதா., B.Sc., L.L.M., முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு உறுதியளிக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | – | மணிகண்டன் | தொழில் | – | |
| த/பெ க/பெ | – | மந்திரியப்பன் | ஜாதி | – | |
| கிராமம் | – | ஆனைமலை | வயது | – | 50 |
| தாலூக்கா | – | ஆனைமலை | தேதி | – | 13.02.2026 |

முதல் விசாரணை

நான் ஆனைமலையில் குடியிருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய நிரூபண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும்.

| Sl.No. | Date | Exhibits Marked | Description | Remarks |
|---|---|---|---|---|
| 1 | | **வா.சா.ஆ. 3** | வா சா 2 ஆகிய எனது ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |

<u>**பிரதிவாதிதரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1) வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தெரியாது. வாதிகள் எனக்கு உறவினர்களா என்றால் இல்லை பக்கத்துவீட்டுக்காரர் ஆவார் . சாட்சியம் அளிக்க யார் என்னை அழைத்தது என்றால் வாதி சாந்தி ஆவார். முதல் விசாரணையில் உள்ள விவரங்கள் யார்

ஒப்பம்/–(R. சுஜாதா),

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

சொல்லி எழுதப்பட்டது என்றால் சாந்தி சொல்லி எழுதப்பட்டது ஆகும். அதில் என்ன எழுதியுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பின்னிட்டு சாட்சி ராமசாமி இறந்துவிட்டதால் அவரது பிள்ளைகளுக்கு வாரிசு சான்றிதழ் கேட்டு தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

2) எதற்காக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்ற விவரமே எனக்கு தெரியாது என்பதால் எனது சாட்சியம் ஏற்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

ஒப்பம்/–(R. சுஜாதா),

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.